**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 49/2021</u>**

பெயர் : பௌஜியாகனி P.W.1.

க/பெ. : தாஜிதீன்

தேதி : 10.02.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

**1.** நான் இந்த வழக்கினை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது இடம் எனக்கு வேண்டும் என்று இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. யாருக்கு எதிராக நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஷேக்அலாவுதீன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதியின் பெயர் சகாபுதீன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் சகாபுதீன் தற்போது உயிருடன் இல்லை.

2. சகாபுதீன் பிரச்சனை செய்ததற்காகத்தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஷேக் அலாவுதீன் பிரச்சனை செய்ததால் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். ஷேக் அலாவுதீன் 4 வருடங்களுக்கு முன்னால் மதியம் 03.00 மணியளவில் பிரச்சனை செய்தார். தேதி நினைவில் இல்லை. என்ன பிரச்சனை செய்தார் என்றால் எனது இடத்தில் இருந்து கொண்டு இடத்தை காலி செய்ய மாட்டேன் என்றும், என்னை அடித்து விடுவதாக மிரட்டினார். நான் ஷேக் அலாவுதீனுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் புகார் கொடுத்ததற்கு போலீசார் மனு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. நான் கொடுத்த புகாருக்கு போலீசார் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் விசாரித்தார்கள் ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை.

3. நான் வழக்கினை சகாபுதீனுக்கு எதிராக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் எனக்கு எந்த பிரச்சனையும் செய்யவில்லை. ஷேக் அலாவுதீன் தான் பிரச்சனை செய்தார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதியின்

பெயர் அடிக்கப்பட்டு மேலே எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. அதன் விஸ்தீரணம் 4 செண்ட் ஆகும். 4 செண்ட் இடம் என்னுடையது என்று எதை வைத்து சொல்லுகிறேன் என்றால் பத்திரத்தினை வைத்து சொல்லுகிறேன்.

4. தாவாசொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். எனது வீட்டிற்கு வடக்கு, பிச்சைகனி வீட்டிற்கு தெற்கு, ரோட்டிற்கு மேற்கு, எல்லையம்மன் கோவில் வீதிக்கு கிழக்கு ஆகும். நான் சொல்லும் நான்கெல்லை தவறு என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரய பத்திரத்தில் வாசாஆ 1 ஆன ஆவணத்தில் பிச்சைகனி வீடு மற்றும் கொல்லைக் கிழக்கு, பௌஜியா கனி வீடு கொல்லைக்கு மேற்கு, எல்லையம்மன் கோவில் சந்திற்கு தெற்கு, ஷேக் தாவு மனைக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரத்தில் உள்ள நான்கெல்லை தான் சரியான நான்கெல்லையாகும். நான் தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு அதன் வில்லங்க சான்றினை எடுத்து பார்த்தேன் என்றால் சரிதான்.

5. நான் 01.01.1975 முதல் 28.06.2021 வரைக்கான வில்லங்க சான்றிதழினை எடுத்து பார்த்தேன் என்றால் சரிதான். அதில் 1833/1978 என்று ஆவணம் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். அந்த விபரப்படி 17.11.1978 ஆம் தேதி சுபைதா பீவி, ஜூலைகாபீவி ஆகியோர் ஜெயினலாவுதீனுக்கு விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தினை நான் வில்லங்க சான்றிதழ் மூலம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. முதல் வில்லங்கத்தை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை, இரண்டாவது வில்லங்கத்தை மட்டும் நான் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற ஆவணத்தின் எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் பதிவு செய்தேன் என்று தெரியுமா என்றால் தெரியாது.

6. என்ன வகை ஆவணமாக கிரயம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் கிரய ஆவணமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. எனது பாட்டி எனது அம்மாவிற்கு 8 செண்ட் நிலத்தை எழுதிக்கொடுத்தார்கள். எனது அம்மாவிடமிருந்து நான் கிரயம் பெற்றேன். எனது தாயார் எனக்கு எழுதிவைத்த ஆவணம் செட்டிமெண்ட் ஆவணமா என்றால் சரிதான். 4 செண்ட் நிலத்தை எனது அம்மா எனக்கு செட்டில்மெண்ட மூலம் கொடுத்தார். 4 செண்ட் நிலத்தை எனது அம்மாவிடமிருந்து கிரயம் பெற்றேன். பொதுவாக சொத்தினை கிரயம் பெறுபவர், கிரயம் கொடுக்கும் நபரிடமிருந்து மூலபத்திரத்தை பெற்றுக்கொள்வது வழக்கம் என்றால் சரிதான்.

7. எனது தாயார் எனக்கு கொடுத்த இடத்திற்கான மூலப்பத்திரத்தை நான் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் அதை நீதிமன்றத்தில் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மூலப்பத்திரத்தில் சர்வே எண் என்ன என்ற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் எனக்கு தெரியும். எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது, மின்கட்டண ரசீது, ஆகியவைகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் அ பதிவேட்டை கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். நான் தான் தாவா சொத்தில் குடியிருக்கிறேன் என கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சான்று எதையும் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. பிரதிவாதி எதற்காக சத்தம் போட்டார் என்ற விபரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஷேக் அலாவுதீனின் மனைவியின் பெரியப்பா ஜெயினலாவுதீன் என்றால் சரிதான். ஜெயினலாவுதீன் தாவா சொத்தினை வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அம்மாவின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் அவர் கைரேகை தான் வைப்பார். நான் கிரயம் வாங்கிய பத்திரத்தில் எனது தாயாரின் கைரேகை உள்ளது என்றால் சரிதான். எனது தாயாரின் கைரேகை உள்ள வேறு ஆவணத்தையும், கிரய ஆவணத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். 1970 ற்கு முன்னர் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது என்றால் எனது பாட்டி ஜலகாம்பாளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது. எனது பாட்டியின் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான்.

9. எனது அம்மாவின் மாமியார் பெயர் ஜூலைக்கா பீவி ஆகும். எனது தாயார் பெயர் சுபைதா பீவி ஆகும். 11.11.1978 அன்று பிரதிவாதியின் மனைவியின் பெரியப்பாவிடம் ஜுலைக்காபீவியும்,. சுபைதா பீவியும் 7–1/2 செண்ட் நிலத்தை கிரயம் செய்து பத்திரப்பதிவும் செய்து கொடுத்துவிட்டதால், மீதம் இருந்த 4 செண்ட் நிலத்தையும் சகாபுதீனிடம் கிரய ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், தாவா சொத்தில் நான் குடியிருப்பதற்கு சகாபுதீன் அனுமதித்து வந்தார்கள் என்றாலும், நான் எனது பண பலத்தினால் 4 செண்ட் நிலத்தை எனது தாயார் எனக்கு கிரயம் செய்து கொடுத்ததாக கிரய ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் ஜெயினலாவுதீன் மற்றும் சகாபுதீனின் அனுமதியின் பேரில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

10. எனது குடியிருக்கும் உரிமையை இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு ஜெயினலாவுதீனும், சகாபுதீனும் ரத்து செய்து விட்டார்கள் என்றாலும், நான் தாவா சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது மற்றும் சட்டத்திற்கு புறம்பானது என்றாலும், அதை வைத்து நான் எந்த உரிமையும் கோர இயலாது என்றாலும் சரியல்ல. சர்வே எண் 194/2D ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆவணம் மோசடியான ஆவணம் என்றாலும், சட்டத்திற்கு புறம்பான ஆவணம் என்றாலும் சரியல்ல. எனது வழக்கிற்கு எந்தவித வசதி வாய்ப்பு குறைவு இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை நடத்துவதற்கான பணபலம் எனக்கு இருக்கிறது என்றால் சரிதான்.

11. எனக்கு ஆள்பலம் உள்ளது என்றால் சரியல்ல. சகாபுதீன் எனக்கு எதிராக நாகப்பட்டினம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். அதில் எனக்கு 20.05.2019 அன்று வரச்சொல்லி அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். என்னை அசல் ஆவணங்களை எடுத்து வரச்சொல்லி சொன்னார்கள். நான் அதை எடுத்துச்சென்ற காண்பித்தேனா என்றால் இல்லை. நாகப்பட்டினம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவின் விசாரணைக்கு சென்றேன் என்றால் என் மீது நில அபகரிப்பு வழக்கு தாக்கல் செய்வார்கள் என்பதாலும், ஒரு உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தால் அங்கு வழக்கு பதிவு செய்வதை தவிர்க்க இயலும் என்பதால், இந்த அசல் வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

மேலும் ஆவணங்கள் தாக்கல் செய்யவேண்டியுள்ளதால் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.